முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 285/2013

நாள். 27.01.2026 பி.வா.சா.5 – திரு.தனராஜன்

த/பெ - திரு. நவமணி தங்கராஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) உங்கள் தகப்பனார் என்ன படித்துள்ளார் என்றால் பழைய 8 ம் வகுப்பு படித்துள்ளார். பி.வா.சா.ஆ.5 ல் உள்ள உங்களது தகப்பனாரின் கையொப்பத்தை எப்போது முதன் முதலில் பார்த்தீர்கள் என்றால் நீதிமன்றத்தில் வைத்து தான் இந்த வழக்கில் பார்த்துள்ளேன். உங்கள் தகப்பனார் கையொப்பம் போட்டதாக சொல்லப்படும் வேறு ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். உங்களை நீதிமன்றத்திற்கு வாக்குமூலம் அளிப்பதற்கு யார் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்தீர்கள் என்றால் அழைப்பாணை வந்தது அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்தேன்.

2) நீதிமன்றத்தில் இருந்து வந்ததாக கூறும் அழைப்பாணையை கைவசம் வைத்துள்ளீர்களா என்றால் கொண்டு வந்துள்ளேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்த பிறகு வழக்கு தொடர்பாக நீங்கள் எவரையும் சந்தித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரி தான். உங்கள் தகப்பனார் பி.வா.சா.ஆ.5 உயில் ஆவணத்தில் சாட்சியமாக கையொப்பம் இட்டதாக கூறும் கையொப்பம் போல் வேறு

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.01.27 04:04:16 +0530

என்னென்ன ஆவணங்களில் அவ்வாறு சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

3) உங்களுக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததன் பேரில் மட்டுமே இந்த சாட்சியம் வழங்கி உள்ளீர்கள் என்றால் சரி தான். முதல் விசாரணை வாக்குமூலம் கொடுக்கும் போது மட்டுமே பி.வா.சா.ஆ.5 ல் உள்ள கையொப்பத்தை தெரிந்து கொண்டு சாட்சியம் அளித்தீர்கள் என்றால் சரி தான். முத்துவேல் நாடாரின் மனைவி சுந்தரராஜ் அம்மாளை உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும், அவர் எனது பெரியம்மா ஆவார்.

4) முத்துவேல் நாடாருக்கும், சுந்தரராஜ் அம்மாளுக்கும் விவாகரத்து வழக்கு நடந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முத்துவேல் நாடாரின் வாரிசுகள் என அவரது மனைவி சுந்தரராஜ் அம்மாள் மற்றும் அவரது மக்கள் பெயரை மட்டும் குறிப்பிட்டு அரசாங்கம் வாரிசு சான்றிதழ் வழங்கி இருக்கிறது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. உங்களுக்கும், சுந்தரராஜ் அம்மாளுக்கும் சொத்து சர்வே எண். 2213/2 சி சொத்து தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டிருந்தது என்று சொன்னால் எனது தகப்பனார் காலத்தில் ஏற்பட்டிருக்கலாம்.

5) பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் உங்களது தகப்பனார்

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.01.27 04:04:22 +0530

கையொப்பம் அல்ல என்றும் வழக்கு பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.01.27 04:04:28 +0530